ஸ்ரீதந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

ஸாதாரண
ஆடி

AUGUST
1970



தொகுதி 32
பகுதி 8

Vol. 32
No. 8

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா,

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காட்டும் வழி வேறு ... 159

Memorandum to Dr. Hande ... 162

ஸஹஸ்ரயோகம் ... 165

கார்யாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

THE ARYA VAIDYA SALA KOTTAKAL

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - மேனேஜிங் டிரஸ்டி - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31
நர்ஸிங்ஹோம் போன் நெ. 44

தலைமை வைத்யர் போன் நெ 25
மானேஜிங் டிரஸ்டி (வீடு) போன் நெ 27
மானேஜர் (வீடு) போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7 எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]


ரிஜிஸ்டார்ட் ஆபீஸ் :
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி-1.
Phone No. 3660

விற்பனை டிப்போ :
31, சின்னக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2
Phone No. 4202


வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

## எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் தயாராகும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

# ஔஷத யோக ஸங்கிரஹம்

## முதல் பாகம்

பிரதி விலை ரூ. 6-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங்டைரக்டர்.

GRAM: KALIA
Phone: Off. 3232, Res. 4343

# KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS
JULLUNDUR CITY. (INDIA)

| Price List | | Rs. ps. |
|---|---|---|
| Pure Musk per gram | | 50-00 |
| Pure Saffron | | 2-00 |
| Pure Gorochanam per gram | | 9-00 |
| Pure Pearls Spl. | ,, | 10-00 |
| ,, No. 2 | ,, | 7-00 |
| ,, No. 3 | ,, | 4-00 |
| Pure Ambar No. 1 | ,, | 3-50 |
| ,, No. 2 | ,, | 2-50 |
| ,, No. 3 | ,, | 2-00 |
| Pure Silver Leaves | ,, | 0-80 |

## PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni | per gram | 0-30 |
| Singapuri (Yellow) | ,, | 0-25 |
| German or Japan | ,, | 0-20 |
| Powder Pachakarpuram | | 0-06 |
| Pure Menthol | ,, | 0-45 |
| Pure Thymol | ,, | 0-20 |
| Ashtavargam | per Kilo | 7-50 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kshir Kakoli | ,, | 8-00 |
| Ridhi Vridhi | | 12-00 |
| Silajit (Kalmodam) | | |
| Suryatapi Silajit No. 1 | ,, | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |

## CRUDE DRUGS

| | | |
|---|---|---|
| Attis Bitter | ,, | 100-00 |
| Beedana | ,, | 20-00 |
| Guggulu Shudh | ,, | 12-00 |
| Gowela | ,, | 60-00 |

| Price List | | Rs. Ps. |
|---|---|---|
| Kuth No. 1 | per Kilo | 5-00 |
| Moosli White | ,, | 15-00 |
| Pushkar mool | ,, | 5-00 |
| Rose Flower Dry | ,, | 10-00 |
| Som Lata | ,, | 10-00 |
| Salib Panja | ,, | 85-00 |
| Salib Gatha | ,, | 20-00 |
| Shingraf | ,, | 300-00 |
| Tiger's Fat | ,, | 45-00 |
| Bears Fat | ,, | 40-00 |
| Pure Vanslochan | ,, | 80-00 |

## AYURVEDIC MEDICINE

| | | |
|---|---|---|
| Chander Prabha | per Kilo | 70-00 |
| Chavan prash | ,, | 10-00 |
| Gudoochi Sattoo (Sindi Maw) | ,, | 12-00 |
| Ras Sindur | ,, | 300-00 |
| Shudh parad | ,, | 30[illegible]-00 |
| Swaran Vang | ,, | 200-00 |
| Yogaraj Guggulu | ,, | 30-00 |
| Kaishore ,, | ,, | 30-00 |
| Maha Yogaraj ,, | ,, | 140-00 |
| Abrak Bhasam | ,, | 200 00 |
| KantLoh Bhasam | ,, | 85-00 |
| Loh Bhasam Special | ,, | 150-00 |
| Shring Bhasam | ,, | 35-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Mandur Bhasam | ,, | 35-00 |
| Silajit Bhasam | ,, | 35-00 |
| Silver Bhasam | ,, | 700-00 |
| Swaran Makshik | ,, | 80-00 |
| Sulphur Purified | ,, | 50-00 |
| Tamber Bhasam | ,, | 300-00 |
| Sidh Makar Dhwaj | per gram | 4-20 |
| Makar Dhwaj ordinary | | 0-80 |

**Please ask for detailed Price List 6¼% Commission to the readers of Vaidya Chandrika**

தந்தி: "அம்ருதம்" P. B. No. 1382. போன்: 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD. AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

எங்களுடைய கிளைகள்:

| | | |
|---|---|---|
| 1. | 23 B, பூஸா ரோடு, புது டில்லி : | போன் : 585687 |
| 2. | மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-18 | ,, 32988 |
| 5. | பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி, பொன்னுனி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1 | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | ,, 33758 |
| 12 | இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | 229, ராஜவீதி, கோயமுத்தூர்-1 | ,, 33988 |
| 14. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2 | |
| 15 | No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னுனி) | |

பாக்டரி:
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன்: 2)

நர்ஸிங்ஹோம்:
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன்: 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க:—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

## வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும்:

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00; 12 ML. ரூ. 3–75

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE: 5441 வீடு போன்: 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

உயர்ந்த கஸ்தூரி, குங்குமப்பூ,
பச்சைகர்பூரம் முதலியவைகளுக்கு
மிகவும் சிறந்த இடம்.

Wholesale Dealers in:
Musk Saffron and Ayurvedic Drugs etc.

CORRESPOND IN HINDI OR ENGLISH

Shri Markanday Musk Depot

(Regd.)

Importers and Exporters

Civil Lines, LUDHIANA, PUNJAB.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

# BHANOT BROTHERS

(REGD.)

**Wholesale Musk, Saffron and Indian Drugs Merchants,**

LUDHIANA - PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்



மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

# *K. L. TALWAR & BROS.,*

MUSK MERCHANTS,

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.



# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 32 | சாதாரண ஆடி | பகுதி 8 |
| Vol. 32 | 1970 ஆகஸ்ட் | No. 8 |


நமச் சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## காட்டும் வழி வேறு

"மாபாங்கம் காணான் கோங்காட்டுக்கூடே" என்பது ஒரு மலையாளப் பழமொழி. அதாவது பாலக்காட்டில் இருக்கும் ஒருவர் வேறொருவரைப் பார்த்து, "சமீபத்தில் மாமாங்கம் வருகிறதாமே எனக்கு அதற்குச்செல்ல விருப்பம், தங்களுக்கு வழிதெரியுமானால் கூறுங்கள்," என்றார். அவர் பார்த்தார். தானோ போகப்போவதில்லை. இவரையும் போகாமல் செய்துவிடலாம். இவருக்குமட்டிலும் ஏன் புண்யம் கிடைக்கவேண்டும் என்று பொறாமைகொண்டார். மாமாங்கம் கும்பகோணத்தில் நடக்கும். அது பாலக்காட்டுக்குக் கிழக்குதிக்கில் உள்ளது. கோங்காடு என்கிற ஊர் பாலக்காட்டுக்கு மேற்குதிக்கில் உள்ளது. 'கோங்காட்டுக்குப்போய் நேராக மாமாங்கம் போய்விடலாம்" என்று

அவர் நண்பருக்கு வழி கூறினர். அதைப் போலவேதான் தற்பொழுது டில்லி வைத்யக்கல்வி மஹாநாட்டில் கிராம வைத்ய அபிவிருத்திக்கு வழி கூறப்படுகிறது.

மெடிகல் காலேஜ்களில் கிராம வைத்யத்தில ஈடுபடுபவர்களுக்கு ஸ்தானம் ஒதுக்கலாமாம். ஆதார டாக்டர்களை உருவாக்கலாமாம். ஹவுஸ் ஸர்ஜன் கோர்ஸை கிராம வைத்யத்தில் போக்கலாமாம். இந்தமாதிரியான யோசனைகள் கொக்கின் தலையில் வெண்ணையை வைத்துப் பிடிப்பதற்கு ஒப்பானவை. தேசீய வைத்யர்களுக்கு இடம் கிடைக்காமல் செய்வதற்கே இந்த யோஜனைகள் பயன்படும்.

மெடிகல் காலேஜில் ஸ்தானம் ஒதுக்குவதால் கிராம வைத்யத்தை பூர்த்தி செய்யமுடியாது. ஆதார டாக்டர்களும் ஹவுஸ் ஸர்ஜன்களும் கிராமத்தில் பணிசெய்வது கிராம மக்களுக்கு ஆபத்தானது. நன்ருகப்படித்து பல வருஷங்கள் அனுபவத்துக்கு பிறகும்கூட வைத்யத் தொழிலில் தவறுகள் விளைவது சகஜம். குறைந்த படிப்புள்ளவரையும் அனுபவம் இல்லாதவர்களையும் கிராமத்தில் பணிசெய்ய விட்டுவிட்டால், கிராம ஜனங்களின் கதி என்னுகிறது? இந்த ஏற்பாடு தேசீய வைத்ய முன்னேற்றத்தைப் பாதிக்குமே தவிர, ஜனங்களின் ஆபத்துத்தீராது.

இது சம்பந்தமாக நமது தமிழ்நாடு அரசாங்கம் கூறியுள்ள யோஜனையும் பயன் அளிக்காது, அதாவது கிராமத்துக்குப் போகும் டாக்டர்களுக்கு ஏராளமாக கடனுதவி செய்யலாம் என்பதே. இதனுல்மட்டும் டாக்டர்களை கிராமங்களுக்குப் போகும்படி செய்யமுடியாது. டவுனில் வைத்யம் செய்ய ஒரு வசதியும் வேண்டாம். ஒரு ரூமும் ஒரு ஸ்டெதாஸ்கோப்பும் போதுமானது. பாக்கி எல்லாவற்றிற்கும் ஸ்பெஷலிஸ்டுகள் இருக்கின்றனர். மருந்து ஷாப்புகளும் ஏராளமாக இருக்கின்றன. வைத்யத்திற்குக் கட்டுப்படாத கேஸ்களை பெரிய ஆஸ்பத்திரிகளில் சேர்த்துவிடலாம். நல்ல பெயர் எடுப்பது மிகவும் சுலபம். முதல் போடாமலே லாபம் அடையலாம். நாகரீகமான வாழ்க்கைக்கும் குறைவில்லை. இவ்வளவு சௌகரியம் இருக்கும்பொழுது கடன் வாங்கியாவது யார் கிராமங்களுக்குப் போவார்கள்? மிகவும் சீக்கிரத்தில் தேசீய வைத்யத்தை அபிவிருத்தி செய்வதுதான் கிராம வைத்யத்துக்கு ஏற்ற செயலாகும்.

தேசீய வைத்யக் கல்லூரியில் நூற்றுக்கணக்கான அப்ளி கேஷன்கள் வந்தும் என்ன பயன், சேர்த்துக்கொள்ளப் படுபவர்கள் மிகக்குறைந்த அளவிலேயே, நிலைமை இப்படியானல் தேசீய வைத்யம் எப்படி சீக்கிரம் பரவும். பல தேசீய வைத்யக் கல்லூரிகள் ஏற்பட்டு நிறையப் படித்த வைத்யர்களை உண்டு பண்ணினல் அவர்கள் டவுனிலுள்ள நவீன வைத்யர்களுடன் போட்டிபோடப் பயந்து கிராம வைத்யத்தில் (ஈடுபடுவார்கள். தவிர கிராமத்து மூலிகைகளும் பயன்படும். ஜனங்களும் அதிக செலவில்லாமல் குணம் அடைவார்கள்.

அரசாங்கமோ, மருத்துவக் கல்வி மஹாநாடோ, நவீன டாக்டர்களோ இந்த மாதிரியான நல்ல யோஜனைகளை ஏற்கா விட்டாலும், 24—7—70ம் தேதி திருவனந்தபுரத்தில் நமது ராஷ்டரபதி பேசியுள்ளது நமக்கு ஆறுதல் அளிக்கின்றது. ஜெனரல் ஆஸ்பத்திரி நூற்ருண்டு விழாவில் அவர் தேசீய வைத்யத்தின் முன்னேற்றத்தையும் ஜனங்களின் நன்மையையும் விரும்பி இவ்வாறு பேசியுள்ளது உலகிற்கே க்ஷேமமானதோர் நற்செய்தி. இதை அரசாங்கம் செவிகொடுத்து ஆவன செய்தால் நல்லது.

---


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

# Memorandum to Dr. Hande

Memorandum submitted to Dr. H. V. Hande, M L. A. by the Members of the Tamilnad Ayurveda Mahamandalam, Tiruchy District Ayurveda Sabha and Ayurveda Seva Samithi on Sunday the 2nd August 1970 at Tiruchirapalli on the present difficulties of the Ayurvedic Physicians and the neglected State of Ayurveda in Tamilnad and suggestions for their rectification.

Ayurvedic physicians are severely handicapped by the enforcement of prohibition rules both morally and financially.

Public Sale of liquor is being carried on in the name of Asavas and Arishtas in many shops in the Streets under the name of Ayurvedic Pharmacy. The name Madu Kashayam is mostly used by them. This name is being confused with the standard Ayurvedic preparation Madhukasavam, mentioned in the Ayurvedic Text, Ashtanga Hrydaya. The State Government has passed orders prohibiting the manufacture of the standard preparation, which is the specific for Diabetes, Skin diseases sprue etc. The important drugs in this preparation are Madhuka Pushpa, Chitramulam, Bhallathakam. Manjishta etc. This preparation is not at all intoxicating and this fact can be easily verified by drinking the same. It is a great handicap for Ayurvedic Vaidyas to treat diabetes etc. if such efficient and shastric preparations like Madhukasavam are prohibited to be manufactured Greater than this is the disgrace brought on the Registered Ayurvedic Vaidyas due to the licence issued to the shops in the streets thereby allowing them to sell liquor in the name of Shastric Asavas and Arishtas. Such sales should be immediately put an end to by strict enforcement of rules.

Great difficulty is now encountered by the registered Ayurvedic Vaidyas in getting L-2 Licences under prohibition. It is requested that the Registered Ayurvedic Vaidyas should be properly recognised and these licences are issued to them without any difficulty.

*Ayurvedic College :* The B. I. M. Course in Sidhdha of Madras and Madurai Universities is being conducted in the Government College of Indigeneous Medicine, Palayamkottah. The B. I. M. Ayurvedic Course, it is stated, could not be started as there are no students for she same.

In this connection the following points may be noted. The qualification for the B. I. M. Ayurvedic Course is a pass in the P. U. C English and Sanskrit Part-III.

Sanskrit had been deleted from the S.S.L.C. Curriculam in High Schools and hence there is no possibility for the candidates to take up to the study of Sanskrit in Part-III in P. U. C. It is a welknown fact that Ayurveda contains special methods of Diagnosis and treatment which other systems of medicines are lacking today. Hence the absence of an Ayurvedic College in Tamilnad denies its people opportunity of having these special and useful methods resulting in a great loss to them and to our country. Hence it is imperative that an Ayurvedic College should be started immediately. To remeady the absence of Sanskrit study in the High Schools and Colleges, the Government should provide for the B. I. M. Ayurvedic entrance Course. If provision for the study of Sanskrit is made, students will duly opt for the B. I. M. Ayurvedic Course in large numbers.

In this direction, one Year Course of study in Sanskrit for the P. U. C. Passed Candidate and Two Year Course for the S. S. L C. Eligible Candidate for the study of English and Sanskrit will be sufficient to join the B.I.M. Ayurvedic Course. It may be pointed out that the Government have already lost much time and hence the Government should take all steps to start the B. I. M. Ayurvedic Entrance Course without any further loss of time

Regarding the importance of the study of Sanskrit, it is well known that Sanskrit and Tamil co-exist in Tamilnad for the past many centuries and Sanskrit is the common property of all Tamilians. It is quite unnecessary to remove Sanskrit in the intention of preventing the study of Hindi in Tamilnad. Sanskrit does not belong to one province like Hindi, but is common to the whole of India.

A few months ago, Our Honourable Minister for Education promised to provide for the study of Sanskrit in High School from VI Std. onwards from June 1970 But no such provision has been made till now in High Schools

It is much to be regretted that individual liberty is denied in the matter of such a vital subject as education where the provision for the study of Sanskrit is volountarily deleted This individual liberty is quite essential in the interest of protecting our cultural heritage so unique with our country.

So we earnestly request you, S r, to take all the necessary steps to impress the Government about the importance of the study of Sanskrit and thus provide for the study of the same in all High Schools beginning from the VI Std. onwards. This will enable the students to continue the study of Sanskrit in the P U. C. Course also Till such time that students with Sanskrit are availab'e for the study of B. I M Ayurveda Course from High Schools, the Government should start the B. I. M Ayurvedic Entrance Course to enable them to join the B. I. M. Ayurveda Degree Course.

**Sri T. S ISWARAN.**
**Sri A. RAGHAVA RAO,**
**Sri V. B. NATARAJA SASTRI,**
**Sri S V. RADHAKRISHNA SASTRI.**

---

## தமிழ் நாடு ஆயுர்வேத மகாமண்டலம்
## (மதுரை கிளை)

### மாதாந்தாக் கூட்டம்

சென்ற 26—7—1970 ஞாயிறன்று வைத்ய ஸ்ரீ S. வேலாயுதன் அவர்கள் தலைமையில் மஹாமண்டலக் கிளையின் **மாதாந்தர** ஸம்பாஷா பரிஷத் கூட்டம் நடைபெற்றது.

வைத்ய ஸ்ரீ S. வேலாயுதன் அவர்கள் மூலநோய்பற்றிப் பேசினர். வைத்ய ஸ்ரீ G. ரவீந்திரன், ஸ்ரீ S. ஸ்ரீனிவாஸ அய்யர் முதலானோர் சர்ச்சையில் பங்கெடுத்துக் கொண்டனர்,

# ஸஹஸ்ரயோகம்

## ஸந்திரோக சிகித்ஸை

உபநாஹத்தை நன்ருக வியர்வை கொடுத்து, பஹிர்முகம் என்ற சஸ்திரத்தால் கீறி, அதில் இந்துப்பு போட்டு மண்டலாக்கிரத்தால் உரைக்கவும். பிறகு திப்பிலி இந்துப்பு தேன் சேர்த்துக் கட்டவும். மறுபடியும் வேப்புடல், நெல்லிக்காய் இவைகளைக் கஷாயம் வைத்து தாரை செய்யவும். பர்வணியை சூண்டலால் எடுத்து ஸந்தியில் மூன்று கோடாக விருத்தி சஸ்திரத்தால் கீறி அர்மத்திற்குப்போல் சிகித்ஸை செய்யவும்; பூயாலஸத்திற்கு முதலில் ஸிராவேதம் செய்யவும் பிறகு கட்டி பழுக்கச்செய்து பழுத்தபின் சிகித்ஸை செய்யவும். கிருமிக்கிரந்தியை முதலில் சாணியால் ஸ்வேதம் செய்து பிறகு கீறி பொடிபோட்டுக் கட்டுதல் முதலியன முன்போல் செய்யவும். பூயாலஸம் சௌகரியப்படாவிட்டால் சங்கைச்சுட்டு சூடும் போடவும்.

967 ரஸாஞ்சனம் துத்தம், அதிமதுரம், அஞ்சனக்கல் சமம் சேர்த்துப் பொடித்துப்போட ஜலஸ்ராவம் தீரும்

## ஸிதரோக சிகித்ஸை

சுக்லிகைக்குப் பித்தாபிஷ்யந்தம்போல் செய்யவும். பலாஸ கிரந்தி பிஷ்டகம், இவைகளுக்குக் கபாபிஷ்யந்தம்போல் சிகித்ஸை செய்யவும். இதில் மெதுவாக அட்டையைவிட்டு ரக்தம்போக்குவதும் நல்லது. அரிப்பு, நீர் இருந்தால் ஜாதிமொக்கு, இந்துப்பு முதலியவற்ருல் அஞ்சனம் சிலாக்கியம் ஸிரோத்பாதம், ஸிராஹர்ஷம், ஸிராஜாலம், அஞ்சன நாமிகா இவைகளுக்கு ரக்தஸ்யந்தம்போல் வைத்யம் செய்யவும். ஸிரோத்பாதத்தில் விசேஷமாகத் தேன், நெய் விடவும். ஸிராஹர்ஷத்தில் தேன், ரஸாஞ்சனம் போடவும் அஞ்சனத்தில் தேன், ஜீனி, தயிர் தெளிவு (மஸ்து) போடவும். அர்மத்தில் சிவந்து புகை அடைந்து இருப்பதற்கு சுக்ரத்தில்போல் வைத்யம் செய்யவும். விசேஷமாகக் கர்பூராதி குழம்பு போடவும்.

## அர்மத்திற்கு சஸ்திரசிகித்ஸை செய்யும் விதி

வியாதியஸ்தனை மல்லார்ந்து படுக்கவைத்துச் சூடான வென்னீரில் நனைத்த துணியால் கண்ணை மெதுவாகத் துடைத்துப் பிறகு ஸ்வேதம் பிடித்து, கண்ணில் இந்துப்பு போட்டு, கண்ணை முடச்

செய்து எலுமிச்சரஸம் விட்டுக்கண்ணைத் தேய்த்து நன்ருக இளக்கிப் பிறகு அர்மத்தை முறிக்கவேண்டும். தலையை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளவும். இமையை நன்ருக விரித்துப் பிடித்துக்கொண்டு கடைக்கண்ணைப் பார்த்து மூக்கு பக்கம் வரையிலும் சூண்டல் (கிடுக்கிகொண்டு) எடுத்து கனீனிகைவரை கொண்டுவந்து நாலில் ஒருபாகம் விட்டுவிட்டு பாக்கியை முறிக்கவும். கனீனிகையிலும் நீர் போகும் நரம்புகளிலும் தட்டாமல் முறிக்க வேண்டும் நரம்பில் பட்டால் நீர் ஒழுகும். அப்பொழுது மூக்கின் ஓரத்தில் தேனும் இந்துப்பும் நிரப்பி இளம் சூடான நெய்யால் நனைத்துப் பிறகு எண்ணெய் தேய்க்கவும். பிறகு தேனும் நெய்யுமாக வைத்துக்கட்டி மூன்ருவது நாள் அவிழ்த்து அதிமதுரக்கஷாயத்தால் அலம்பி புங்கம் விதையைப் பாலில் போட்டுக் காய்ச்சி கண்ணில் தாரைவிடவும். மஞ்சள், மரமஞ்சள், லோத்திப்பட்டை, நல்லபுடல், அதிமதுரம், முள்முருங்கை பட்டை இவைகளைக் கஷாயம் வைத்துத் தேன் கலந்து தாரை செய்து முன்போல கட்டுக்கட்டி ஐந்தாவது நாள் அவிழ்த்துப் பிறகு புண் ஆறுவதற்கு நெய் வடித்துப்போட்டு நல்லபுறம்படை செய்து (அதாவது கண்ணில் ஒன்றும் படாமல் இருக்கும்படி மருந்து அரைத்து மூடுவது) வைத்துக்கொண்டு மெதுவாகப் புண்ணைக் காயவைக்கவும். கண் புறம்படைக்கு வர்த்மரோக சிகித்ஸையில் கடைசியில் சொல்லிய இக்ஷுமூலாதி அல்லது முக்காதி (திரிபலாதி)களைப் பாலில் அரைத்துப் போடவும். சஸ்திர சிகித்ஸை செய்த இடத்தில் அதிக எரிச்சல், வலி உண்டாளுல் பிரும்ஹணமான மருந்துகளைத் தாரை செய்து கர்சனமான மருந்துகளைப் போடவும். நரம்புகள் தடித்து வலிகொடுத்தால் கர்பூரம், இந்துப்பு, புராணகிருதம் கண்ணிற்குப் போடவும். பிறகு சிறிய கோதந்தாதியும் கர்பூராதி அஞ்சனமும் ஸிதாமனேசிலாதியும் போடுவது விசேஷம். இது அர்மத்திற்கு நல்லது. பொதுவாகக் கண் வியாதிகள் எல்லாவற்றிற்கும் பீதரோகிணி முக்கியமானது. அதை எல்லா மருந்துகளுக்கும் சேர்த்து வைத்யன் யுக்திபோல் செய்யவேண்டும். ஜாதிமொக்கு, இந்துப்பு, தேவதாரு, சுக்கு இவைகளைப் பிரஸன்ன என்ற மத்தியத் தெளிவில் அரைத்துக் குளிகைசெய்துபோட வீக்கம், அரிப்பு முதலியன தீரும்.

968. ஸ்படிகம், குங்குமப்பூ, சங்கம், அதிமதுரம், அஞ்சனக் கல் இவற்ருல் குளிகைசெய்து போடவும்.

969. கோதந்தாதி—பசுமாட்டுப்பல், குங்குமப்பூ, சங்கு, ஸ்படிகம், சந்தனம், மனேசிலை, மரமஞ்சள், அதிமதுரம் இவைகளை அரைத்து குளிகைசெய்துபோட அர்மம் திமிரம், சுக்ரம் தீரும்.

970. கர்பூராதி அஞ்சனம்—பச்சைக்கர்பூரம், அஞ்சனக்கல், கருவங்கம், ரஸம், திப்பிலி இவைகளை நந்தியாவட்டை ரஸத்தில், அரைத்துக் காயவைத்துப் பிறகு தேனில் அரைத்துக் குழம்பு செய்து ஸ்படிக பாத்திரத்தில் வைத்துக்கொண்டு உபயோகிக்க சுக்ரம், அர்மம், காசம், திமிரம் முதலியன தீரும்.

971. ஸிதாமனச்சிலாதி—ஜீனிச்சர்க்கரை, மனோசிலை, ஏலரிசி, அரிதாரம், இந்துப்பு சுக்கு வகைக்கு ஒன்றரைகழிஞ்சு (அரைத் தோலா) மாக்ஷிகம் 2 தோலா, இவைகளைத் தேனில் அரைத்து குழம்பாகச் செய்து போடவும். சிலேஷ்மதிமிரம், பில்லம், சுக்ரம், அர்மம், சோஷம் இவை தீரும். கருவிழியில் ஏற்படும் க்ஷதசுக்ரம், அஜகா, சுத்தசுக்ரம், ஸிராசுக்ரம் இவைகளுக்கு கர்பூராதிக்குழம்பு, சோதந்தாதி குளிகை நல்லது.

973 சுத்திசெய்த துத்தம், கர்பூரம், பீதரோகணி, சமம் சேர்த்துப் பொடிசெய்து கண்ணில்போட அர்மம், ஆந்த்யம், சுக்ரம் தீரும். இரவு படுக்கும்பொழுது திரிபலை சூர்ணம், திரிபலை கிருதம் திக்தகிருதம் இவற்றில் ஏதாவது சாப்பிட்டு வந்தால் சுக்ரம். அர்மம், திமிரம் தீரும். நெற்றியில் ரக்தஸ்ராவம் செய்யவும். பேதிக்குக் கொடுக்க வேண்டும். நஸ்யரூபமான சிரோவிரேசனம், நேத்திரவிரேசனமும் செய்யவும். விசேஷமாக விரணசுக்ரத்தில் மூன்று நேரம் சிவதை கஷாயம் வைத்துச் சாப்பிடவும் கண்ணில் சிகப்பு, அரிப்பு, வறவறப்பு முதலியன இருந்தால் தீக்ஷ்ணமான அஞ்சனம் செய்துவரவும்.

973 மாந்துளிர், காகோலி, திராக்ஷை, மரமஞ்சள், அதிமதுரம், இவையால் காய்ச்சின ஆட்டின் பாலில் சர்க்கரை சேர்த்துத்தாரை செய்யவும். சுக்ரம் தீரும். சுக்ரத்திற்கு, ஜாத்யாதிவர்தி, (குளிகை) தந்தகுளிகை தமாலபத்திராதி இவை மிகச்சிறந்தவை. புண்களுக்கு ரத்தினாதி குளிகை சிறந்தது. மஹாநீல குளிகை எல்லா சுக்ரத்திற்கும் விசேஷம். சங்ககோலாஸ்தியாதி சூர்ணம் நல்லது. முஸ்தாதி குளிகையை மருதம்பட்டை ரஸத்தில் அரைத்துப்போட சுக்ரம் தீரும். முன் விரண சுக்ரத்திற்குச்சொல்லிய சிகித்ஸையை ஸிரா சுக்ரத்திற்கும் செய்யலாம் அஜகைக்கு புண்டிரயஷ்டியாதிவர்தியைப் போடவும். குணம் ஏற்படாவிடில் அர்மசிகித்ஸை செய்யவும். குத்து, வலி, வீக்கம், உண்டானால் எண்ணெய், நெய், உபயோகிக்கவும். ரக்தமோக்ஷம், முதலிய சிகித்ஸை செய்யவும் அஜகையில் மேல் தடிப்பாக இருக்கும் பாகத்தைப் போக்கிக் காய்ந்த சாணி, கொட்டாங்கச்சி, மூங்கில் தோல், சேங்கொட்டை, பனைமட்டை, இவை சாம்பல் செய்து ஜலத்தில் கரைத்து தெளிவு எடுத்துத்தாரை

செய்யவும் இதில் சௌகரியமாகாவிட்டால் ஊசியால் குறுக்கே குத்தி மெதுவாக சுண்டுவிரல் கட்டைவிரல் இவை இரண்டும் சேர்த்துக்கசக்கி உள் ஜலத்தைப் போக்கிப்பிறகு திராக்ஷாதியைக் கண்ணில் நிரப்பி முன்போல் கட்டி ஏழுநாள் கழித்து அவிழ்த்து கண் சரியாக ஆனால் நஸ்யம், ஸ்நேஹம், அஞ்சனம், முதலியன செய்யவும் சுக்ரரோகத்தில் திரிபலாதி கிருதத்தால் நஸ்யம் பானம் செய்விக்கவும். தேய்த்துக்கொள்ள மஞ்சிஷ்டாதி தைலம் அஸன வில்வாதி திரிபலாதி பிருங்காமலகாதி முதலியன விசேஷம். ' சனநாத சிபாயஷ்டி '' என்ற நெய்தாரை செய்யவும். அபிஷ்யந்தம், அதிமந்தம், அக்ஷிபாகம், முதலியவற்றில் தடாக சுக்திஸாராதி நெய்தாரை செய்யவும் இது சுக்ரத்தில் மிகவும் நல்லது பனைபட்டையை வாட்டிப்பிழிந்த ரஸத்தில் தேன் சேர்த்துத் தாரைசெய்ய எல்லா சுக்ரங்களும் தீரும். காக்கைப் பூவின் வேரைப்பிழிந்து ரஸத்தைப்போட சுக்ரம் தீரும். தேனும் சேர்த்துப்போடவும். சநதனம், இந்துப்பு, பத்யாதியான சூர்ணம் இவைகளால் உரைத்து அர்மம் சுக்ரம், இவைகளைப்போக்கவும். குளத்துக்கிழிஞ்சலில் இருக்கும் மாம்ஸத்தைப் பாலில் போட அல்லது நெய்யில் போட விரண சுக்ரம் தீரும். தடாக சுக்திமாம்ஸ நெய் தாரை செய்ய கண்ணில் போட விரணசுக்ரம் அஜகை தீரும். வைடூர்ய ஸ்படிகாதியும் விரணசுக்ரத்தைப்போக்கும். தாம்பிராதி மருந்து க்ஷதசுக்ரம், அர்மம், இவைகளைப் போக்கும். நாளிகே ராஞ்சனம் எல்லா உஷ்ணங்களுக்கும் விசேஷம்.

973 கர்பூராதி ரஸக்கிரியை—பச்சைக்கர்பூரம், ஸ்படிகம், சோழி, மிளகு, மரமஞ்சள், திப்பிலி, இந்துப்பு, துத்தம், பீதரோ கணி, கடல்நுரை, காவிமண், மாக்ஷிகம், சங்கு, அஞ்சனக்கல், இவைகளைச் சமமாக எடுத்துப் பொடிசெய்து ஏழு துணியில் வஸ் திரகாளிதம் செய்து, சிறுகத் தேன்விட்டு 25 நாழிநேரம் அரைத்து கர்பூரம் சேர்த்து 5 நாழிகை அரைத்துப் பிறகு கண்ணில் மைபோடுவதுபோல் போடவும்.

974 கோதந்தாதி—பசுமாட்டின் பல், கோழிமுட்டை ஓடு, யானைப்பல், ஆமையோடு, சோழி, கலைமான்கொம்பு, கடல்நுரை, அரிதாரம், தாம்பிரத்தூள், துத்தம், பச்சைக்கர்பூரம், கழுதை எலும்பு, ஸ்படிகம், மெழுகு, பீதரோகணி, இவை கஷாயம் செய்து தாரை செய்யலாம் அல்லது குளிகை செய்து தேனில் உரைத்துப் போடலாம்.

975 துத்தாஞ்சனம் — கோமூத்திரம், ஆட்டின் மூத்திரம், காடி, தாய்ப்பால், நெய், ஜலம், தேன், இவைகளில் ஒவ்வொன்றி

லும் ஏழுதடவை காய்ச்சித்தோய்த்து சுத்தமான துத்தத்தைப் பொடி செய்து தேனில் குழைத்து கண்ணில் போட எல்லா விதமான கண் வியாதிகளும் தீரும். இதை உபயோகிப்பதால் கருடன்போல் கண்பார்வை ஏற்படும்

976 ஜாதி முகுளாதிவர்த்தி—ஜாதிமொக்கு, அரக்கு, சந்தனம் காவிமண், இவைகளை அரைத்துக் குளிகைசெய்து போட க்ஷதசுக்ரம் தீரும்

977. தந்தவர்தி—யானைப்பல், காட்டுப்பன்றிப்பல், ஒட்டகைப்பல், பசுமாட்டுப்பல், குதிரைப்பல், ஆட்டுப்பல், கழுதைப் பல், சங்கு முத்து, கடல்நுரை, மிளகு, வெட்டிவேர் இவைகளை ஜலத்தில் அரைத்துக் குளிகைசெய்துபோட க்ஷதசுக்ரம் தீரும்.

978 தமாலபத்திரம் கோதந்தாதி பச்சிலை, பசுமாட்டுப்பல், சங்கு, கடல்நுரை, கழுதை எலும்பு, தாப்பிரத்தூள் இவைகளை கோமயத்தில் அரைத்துக் குளிகைசெய்துபோட எல்லா சுக்ரமும் தீரும்.

979. ரத்தினாதி—ரத்தினங்கள் ஒன்பதும், தந்தவர்த்தியில் சொல்லிய எல்லாப்பற்களும், கலைமான் கொம்பு, யானைக்கொம்பு, பசுமாட்டுக்கொம்பு, ஆட்டுக்கொம்பு, இருப்பு தாம்ரம், உருக்கு, தங்கம், வெள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலரிசி, புங்கம்விதை, உள்ளிப்பூண்டு இவைகளைப் பன்னீரில் அரைத்துக் குளிகை செய்துபோட விரணசுக்ரம் தீரும்.

980. மஹாநீல குளிகை—சிறுவழுதிணைவேர், அதிமதுரம், தாம்ரம், இந்துப்பு சுக்கு இவைகளை நெல்லிக்காய் ரஸத்தில் அரைத்து, தாம்ர பாத்திரத்தில் பூசி யவை, நெல்லிஇலை, நெய், மூன்றும் சேர்த்து நெருப்பில் போட்டு அந்தப்புகை இந்த மருந்தில் படும்படி ஒரு யாமத்துக்குக் குறையாமல் வைத்திருந்து, பிறகு எடுத்துக் குளிகை செய்து, நிழலில் காயவைத்து, ஜலம் தேன் முதலியவற்றில் உரைத்துப்போட சுத்தசுக்ரம் தீரும்.

981 சங்ககோலாஸ்தியாதி—சங்கு, இலந்தைக்கொட்டை, தேத்தாங்கொட்டை, திராக்ஷை, அதிமதுரம, நிமிளை இவைகளை ஜலத்தில் அரைத்துக் குளிகைசெய்து போடவும்.

கடல் நாக்கு, கடல்நுரை, வாகைப்பூ இவைகளை ஜலத்தில் அரைத்து குளிகைசெய்து போடவும்

982. நெல்லிக்காய், கஞ்சகம் இவைகளைக் கஷாயம்வைத்து வத்ஸநாபியை சுட்டு சாம்பல் செய்து ஷி கஷாயத்தில் கலக்கி மூன்றுநாள் காய்ச்சி வற்றவைத்துக் காயவைத்துப் பொடி செய்து கண்ணில்போட சுக்ரம் கரைந்துபோம்.

983. கோகராச்வாதி—பசுமாட்டுப்பல், கழுதைப்பல், குதிரைப்பல், ஒட்டகைப்பல், சங்கு, கடல்நுரை இவைகளை மருதம் பட்டை ரஸத்தில் அரைத்து குளிகைசெய்துபோட சுக்ரம் தீரும்.

984. புண்ட்ரயஷ்ட்யாதி — கரும்புவேர், அதிமதுரம், காகோலி, சிறுவழுதிலைவேர், உருக்குத்தூள், மஞ்சள், அஞ்சனக் கல் இவை சமம் எடுத்து ஆட்டுப்பாலில் அரைத்து, யவைநெய் கலந்து தூபம்போட்டு பிறகு நெல்லிஇலை நெய்கலந்ததூபம் போட்டு இவ்விதம் மாற்றிமாற்றிப் புகைபோட்டு குளிகைசெய்து போட சுக்ரம் தீரும்

685. கனநாதசிபாதி—புரசப்பட்டை, தாமரைக்கிழங்கு, அதிமதுரம், செங்கழுநீர்கிழங்கு, சந்தனம் இவைகளைக் கஷாயம் கல்கம் சேர்த்து வடித்தநெய் அக்ஷிபாகம் முதலியவற்றைப் போக்கும்.

986 தடாகசுக்திஸாராதி—குளத்துக்கிழிஞ்சல் மாம்ஸம், முருங்கை இலை ரஸம், நந்தியாவட்டை ரஸம், பனம்பட்டை ரஸம், பசும்பால், பசுநெய் இவை வகைக்கு அரை லிட்டர். மரமஞ்சள் சந்தனம், அதிமதுரம் இவை கல்கம் செய்து மெழுகுபதமாக வடித்து தாரை, கண்ணில் கட்டுவது செய்ய விரணசுக்ரம் முதலியன தீரும.

பனமட்டை ரஸம் தேன் கலந்து தாரை முதலியது செய்ய சுக்ரம் தீரும்.

987. சந்தனம் கிராம் 10, இந்துப்பு கிராம் 20, கடுக்காய் கிராம் 30, புரசம்பிசின் கிராம் 40 பொடிசெய்து கண்ணில்போட அர்மம், சுக்ரம் முதலியன தீரும்.

குளத்துக் கிளிஞ்சல் மாம்ஸத்தைத் தாய்பாலில் அரைத்து நெய்கலந்து கண்ணில்பூச விரண சுக்ரம் அஜகை தீரும்.

988. குளத்துக் கிளிஞ்சல் மாம்ஸரஸம், பால், நெய் இவை சேர்த்து அதிமதுரம் சிறுகீரை, சந்தனம் இவை கல்கம்சேர்த்து வடித்து தாரைதர்பணம் முதலியன செய்ய விரணசுக்ரம் தீரும்.

989. தாம்ராதி குளிகை—தாம்ரப்பொடி 16 கிராம் அதிமதுரம், 14 கிராம் கோஷ்டம் 12 கிராம், வசம்பு 10 கிராம். இந்துப்பு 8 கிராம், திப்பிலி 6 கிராம், இவைகளை ஆட்டுப்பாலில் அரைத்துத் தாம்ரபாத்திரத்தில் தடவி குளிகை செய்து போட க்ஷதசுக்ரம் முதலியன தீரும்.

990. நாளிகேராஞ்சனம் (இளநீர் குழம்பு) — மரமஞ்சள் கிராம் 100 திரிபலை கிராம் 100 அதிமதுரம் பலம் 150 இவைகளை இளநீர் 18 லிட்டரில் இடித்துப்போட்டு எட்டில் ஒரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டி மறுபடியும் சுண்டவைத்துக் கப்பிபதத்தில் எடுத்து கல்வத்தில் போட்டு ஆறின பிறகு பத்து நாழிகை அரைத்துத் தேன் கலந்து ஐந்து நாழிகை அரைத்து, இந்துப்பு 30 கிராம் பீதரோகணி க்ராம் மூன்று, பச்சைகர்பூரம் டெசிக்ராம் மூன்று இவை எல்லாம் சேர்த்து ஏழு நாழிகை அரைத்துக் கண்ணில் போட பித்த சம்பத்தமான விரணம், அர்மம், திமிரம், முதலியன தீரும். கண்ணின் கருவிழியில் இருக்கும் பாப்பாவில் திமிரம் வந்தால் உடன் சிகித்ஸை செய்யவேண்டும்.

அதிமதுர சூர்ணத்திற்குச் சமன் திரிபலை சூர்ணம் சேர்த்துத் தேனில் குழைத்துச்சாப்பிடவும், திரிபலை சூர்ணத்தை தேன் நெய் கலந்து குழைத்து இரவு படுக்கும்பொழுது சாப்பிடவும். இரவு சாப்பாட்டிற்குப் பிறகு கைகால் அலம்பி துடைத்துக் கொண்டு முன் சொன்ன மருந்தைச்சாப்பிடவும். ஜீவந்தியாதி கிருதம் படோலாதிகிருதம் உபயோகிக்கவும். இது இரண்டும் சேர்த்துக் காய்ச்சின கிருதமும் உபயோகிக்கலாம். திராக்ஷா சந்தனம் என்ற கிருதமும் திரிபலா கிருதமும் யஷ்டிமதுகம் என்ற மஹாதிரைபலகிருதமும், விசேஷம். அதிமதுரம், திரிபலை சமம் சேர்த்துச் சூர்ணித்துத் திரிபலை கிருதத்தில் சாப்பிட குணம் உண்டாகும். அதிமதுரத்தை, மஹாதிரைபல கிருதத்தில் இரவு படுக்கும்பொழுது (ஆகாரத்திற்குப்பிறகு) சாப்பிடவும். நெய்யில் திரிபலை சூர்ணம் குழைத்துச்சாப்பிட்டு உடன் நெல்லிக்காய் கஷாயம் சாப்பிட கண் கருடன் கண்போல் ஆகும்.

991. அதிமதுரம், வெள்ளி, பொன், உருக்கு, பழைய நெய், ஜீனி சர்க்கரை, இவை ஒவ்வொன்றும் சேர்த்துத் திரிபலை சூர்ணம் சாப்பிட திமிரம் தீரும். இது நிமியால் சொல்லப்பட்டது. இந்த மருந்துப் பொடிகளால் அடை, அப்பம், பாயஸம் முதலியன செய்து சாப்பிடவும். திரிபலை கஷாயத்தில் உலைவைத்துச் சமைத்துச்சாப்பிடவும். திமிரம் தீரும்.

———

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

## சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma. Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press Tiruchirapalli-2.